10-01-2012. நெல்லை டைம்ஸ் (1)



தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்திற்கு தனி பட்டியல் - தியாகி இமானுவேல் சேகரனுக்கு அரசு விழா

# பரமக்குடி செல்ல அனுமதி மறுப்பால் தமிழகத்தில் தனிமனிதன் சுதந்திரம் பறிப்பு



தமமுக தலைவர்

## ஜான்பாண்டியன்

'ஆக்ரோஷ' பேட்டி

தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் நிறுவன தலைவர் பெ.ஜான்பாண்டியன். இவர் அகில இந்திய தேவேந்திரகுல வேளாளர் சங்க நிறுவன தலைவராகவும் இருக்கிறார். தமிழக அரசியலில் மட்டுமின்றி இந்திய அரசியலிலும் பரபரப்பை ஏற்படுத்தியவர். கடந்த ஆண்டு செப்டம்பர் 11ம்தேதி பரமக்குடிக்குயில் உள்ள தியாகி இமானுவேல் சேகரன் நினைவிடத்திற்கு சென்று மரியாதை செலுத்த இருந்த நிலையில், தூத்துக்குடியில் நடந்த திருமண நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்றுவிட்டு நெல்லைக்கு திரும்பும் வழியில் வல்லநாட்டில் வைத்து காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார்.

இந்த தகவல் காட்டுத்தீயாக பரவியதால் ராமநாதபுரம் மாவட்டம் உள்பட தமிழகத்தில் பல இடங்களில் வன்முறை சம்பவங்கள் வெடித்தன. பரமக்குடியில் போலீசாருக்கும், பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் கலவரம் உருவானது. இதில் தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்த 6 பேர் உயிரிழந்தனர். இச்சம்பவத்திற்கு பிறகு ஜான் பாண்டியன் ராமநாதபுரம் மாவட்டத்திற்குள் செல்ல இன்றுவரை காவல்துறை தடை விதித் திருக்கிறது.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த குடும்பத்தின ருக்கு ரூ.5 லட்சம், அரசு வேலை வழங்கவேண் டும். சிபிஐ விசாரணை வேண்டும், சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளை கைது செய்யவேண்டும் என தமிழக அரசை பல அரசியல் கட்சிகளும், சமுதாய அமைப்புகளும் வலியுறுத்தி வந்தன.

இச்சம்பவம் தொடர்பாக தமிழக அரசு, ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையிலான குழு அமைத்து விசாரணை நடத்தி வந்தது. இந்நிலையில் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ.5 லட்சமும், அரசு வேலையும் வழங்குவதுடன், சி.பி.ஐ. விசாரணைக்கும் அரசு உத்தரவிட்டது.

இந்த சூழலில் தமிழகம் முழுவதும் கட்சிப் பணிகள் மற்றும் சமுதாயக் கூட்டங்களில் பரபரப்பாக பங்கேற்று வரும் ஜான்பாண்டியனிடம் பரமக்குடி சம்பவம், முல்லை பெரியாறு, கூடங் குளம் அணுஉலை, எம்ஜிஆர், ஜெயலலிதா, கருணாநிதி, விஜயகாந்த் பற்றி 'தி நெல்லை டைம்ஸ்'க்கு சிறப்பு பேட்டி அளித்தார். அது வருமாறு:-

பரமக்குடியில் நடந்த கலவரத்தில் காவல் துறையினரின் அத்துமீறிய துப்பாக்கி சூட்டில் தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்தைச் சேர்ந்த 6 பேர் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. அந்த விசாரணையை துரிதப்படுத்தி முடிக்கவேண்டும். இதில் காலதாமதம் இருக்ககூடாது. இதனை வலியுறுத்தி மதுரையில் விரைவில் எனது தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்த இருக்கிறோம். 6 பேர் அநியாயமாக கொல்லப்பட்டதில் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள் மீது இதுவரை தமிழக அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இது தேவேந்திரகுல வேளாளர் சமுதாய மக்கள் மத்தியில் மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தி உள்ளது. குறைந்தபட்சம் இடமாற்றம்கூட செய்தி ருக்கலாம். அதைகூட செய்யவில்லை. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கொலை வழக்கு (302பிரிவு) பதிவு செய்து கைது செய்யவேண்டும். இதற்காகவும் விரைவில் நாங்கள் ஆர்ப்பாட்டம் நடத்த இருக்கிறோம். பரமக்குடி கலவரம் தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதாவை நேரில் சந்தித்து தன்னிலை விளக்கம் அளிக்க தயாராக இருக்கிறேன்.

இதுதொடர்பாக பலமுறை சந்திக்க வாய்ப்பு கேட்டும் அனுமதி கிடைக்கவில்லை. நிச்சயம் அனுமதி கிடைத்தால் முதல்வரை நேரில் சந்தித்து விளக்கம் அளிப்பேன்.

ராமநாதபுரம் மாவட்டத்திற்குள் நுழைய இன்றுவரை எனக்கு காவல்துறை அனுமதி அளிக்கவில்லை.

பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நேரில் சென்று ஆறுதல்கூட சொல்ல முடியவில்லை. ஜனநாயக நாட்டில் ஒரு தனிமனிதன் சுதந்திரம் பறிக்கப்படுவது கேலிக்கூத்தாக இருக்கிறது.

அந்த மாவட்ட எஸ்.பி.யிடம் நான்குமுறை மனு கொடுத்தோம். அதற்கு இதுவரை எந்தவித பதிலும் இல்லை. கடந்த 27ம்தேதி கூட அனுமதி கேட்டோம். அப்போதும் அனுமதி மறுக்கப்பட்டதாக ஒரு கடிதத்தை கொடுத்துவிட்டார்கள்.

இதுபற்றி மதுரை உயர்நீதிமன்ற கிளையில் வழக்கு தொடர்ந்திருக்கிறேன். அதில் நல்ல தீர்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறேன். முல்லைப் பெரியாறு அணை பிரச்னையில் மத்திய அரசும், கேரள அரசும் தமிழகத்தை வஞ்சம் செய்கிறது.

சுப்ரீம் கோர்ட் உத்தரவைகூட கேரள அரசு மதிக்கவில்லை. எனவே கேரள அரசு மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்து உம்மன்சாண்டி அரசை டிஸ்மிஸ் செய்யவேண்டும். முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் காங்கிரஸ், பா.ஜனதா ஆகிய கட்சிகள் இரட்டைவேடம் போடுகின்றன.

கூடங்குளம் அணுஉலையை பொறுத்தவரை போராட்டம் நடத்திவரும் மக்களின் உணர் வுகளுக்கு நாங்கள் மதிப்பு அளிப்போம். அவர்க ளுக்கு தொடர்ந்து எங்கள் ஆதரவு உண்டு.

மத்திய அரசும், மாநில அரசும் ஒருமித்த கருத்தோடு இந்த பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அந்த பகுதி மக்களின் அச்சத்தை போக்கும் வகையில் இரண்டு அரசுகளும் இணைந்து செயல்படவேண்டும். மத்திய அரசு ஒரு கருத்தையும், மாநில அரசு ஒரு கருத்தையும் கூறி மக்களை குழப்பகூடாது. இதற்கு விரைவில் நல்ல தீர்வு காணவேண்டும்.

தேவேந்திரகுல வேளாளர் சமுதாயம் ஆதிராவிடர் பட்டியலில் வருகிறது. எனவே தேவேந்திரகுல வேளாளர் சமுதாயம் உள்பட சில உட்பிரிவுகளை உள்ளடக்கி தேவேந்திரகுல வேளாளர் என தனி பட்டியலை தமிழக அரசு அறிவிக்கவேண்டும்.

எஸ்.சி. பிரிவிற்கான இடஒதுக்கீட்டை அதிக ரித்து, உள்ஒதுக்கீட்டை வழங்கலாமே தவிர ஏற் கெனவே இருக்கின்ற இடஒதுக்கீட்டை வைத்து உள்ஒதுக்கீடு வழங்கக்கூடாது. இந்த சீரியசான விஷயத்தில் கடந்த திமுக அரசு முட்டாள்தனம் செய்துவிட்டது.

மூத்த அரசியல் தலைவர், அரசியல் சாணக்கி



## கேலிக்கூத்தானவர் விஜயகாந்த்!

**கேள்வி: தேமுதிக தலைவர் விஜயகாந்தின் செயல்பாடுகள் எப்படி உள்ளது?**

பதில்: அவர் அரசியல் கட்சி தலைவருக்கே தகுதியில்லாதவர். அவரது அரசியல் கேலிக்கூத்தானது. அதிமுக தயவால் வெற்றிபெற்று 29 பேர் எம்எல்ஏவாகி இருக்கிறார்கள். அவர் என்ன பேசுகிறார் என்பதே தெரியவில்லை.

யன் என்று கூறக்கூடிய முன்னாள் முதல்வர் கருணாநிதி உள்ஒதுக்கீடு வழங்கியதன் மூலம் தேவேந்திரகுல வேளாளர் சமுதாயத்தை ஏமாற்றிவிட்டார். கடந்த 5 ஆண்டு கால திமுக ஆட்சியில் தேவேந்திரகுல மக்களுக்காக குறிப்பிட்டு சொல்லும்படி எதையும் அவர் செய்ய வில்லை. இதனால்தான் கடந்த சட்டமன்ற பொதுத்தேர்தலில் திமுகவுக்கு இவ்வளவு பெரிய தோல்வி கிடைத்தது.

**கேள்வி: தேவேந்திர குல மக்களுக்காக நீங்கள் செய்தது என்ன?**

பதில்: தேவேந்திரகுல மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து நான் போராடி வருகிறேன். இந்த சமுதாயத்தை தனி பட்டியலாக அறிவிக்கவேண்டும் என்று தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறேன். அதை இப்போது அல்ல. 1974ல் இருந்து வலியுறுத்தி வருகிறேன். பழனி பாலதண்டாயுதபாணி கோயிலில் தேவேந்திரகுல வேளாளருக்கு என்று மண்டகப்படியை அப்போது முதல்வராக இருந்த கருணாநிதியிடம் கேட்டு பெற்றேன். இப்போது ஆண்டுதோறும் தைப்பூசத்தையொட்டி 2ம் மண்டகப்படி தேவேந்திரகுல சமுதாயத்திற்கென்று ஒதுக்கப்பட்டு உள்ளது. இப்போது நடைபெற இருப்பது 14ம் மண்டகப்படி. இதற்காக முன் னாள் முதல்வர் கருணாநிதிக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் தியாகி இமானு வேல்சேகரனுக்கு தமிழக அரசு, அரசு விழா எடுத்து கவுரவப்படுத்த வேண்டும். அதற் காக எனது போராட்ட பயணம் தொடரும். மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள இந்த சமுதாயத்தை முன்னேற்றப்பாதைக்கு கொண்டு செல்லவேண்டும் என்பதற்காக நான் அயராது பாடுபட்டு வருகிறேன்.

**கேள்வி: டெல்லியில் பிரதமர் தலைமையில் நடந்த கூட்டத்தில் கலந்துகொண்டீர்களாமே?**

பதில்: ஆமாம். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்கள் மற்றும் சிறுபான்மை மக்களின் உரிமைகளுக்காக சர்வதேச அளவிலான கருத்தரங்கம் புதுடெல்லியில் நடந்தது. லோக் ஜனசக்தி தலைவர் ராம்விலாஸ் பஸ்வான் தலைமை வகித்தார். தமிழகத்திலிருந்து சிறப்பு அழைப்பாளராக நான் கலந்துகொண்டேன். இதில் இந்திய பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங்கும் பங்கேற்றார். அப்போது இந்த சமுதாயத்திற்காக என்னென்ன செய்யவேண்டும் என்பதை பிரதமர் முன்னிலையில் எடுத்துரைத்தேன். பிரதமரும் தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கைகளை பரிசீலனை செய்வதாக கூறினார்.

**கேள்வி: கேரளாவில் நடந்த ஒரு கூட்டத்தில் நீங்கள் கலந்துகொண்டீர்களாமே?**

பதில்: இது நடந்து நாட்களாகிவிட்டது. கேரளாவில் தேவேந்திரகுல வேளாளர் மக்கள் ஏற்றத் தாழ்வுடன் நடத்தப்படுகின்றனர். இதுபற்றி ஒரு சிறப்பு கூட்டம் நடந்தது. இதில் நான் பங்கேற்று பேசினேன். முன்னாள் மத்திய அமைச்சர் சசிதரூர் உள்பட அந்த மாநில அமைச்சர்கள், எம்.பி.க்கள் கலந்துகொண்டனர்.

**கேள்வி: முன்னாள் முதல்வர் கருணாநிதியின் மகள். கனிமொழிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது பற்றி...?**

பதில்: ஒரு விசாரணை கைதிக்கு இந்த அளவுக்கு ஆடம்பர வரவேற்பு கொடுக்கப்பட்டது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல. இதை மக்கள் ஒருவித வெறுப்புடன்தான் பார்த்தார்கள். இந்த ஆடம்பர வரவேற்பு குற்றம் செய்ததை மறைப்பதற்காகவா, சி.பி.ஐ.யையும், மத்திய அரசையும் மிரட்டுவதற்காகவா என்பது



## • எங்கள் சமுதாயத்தை புறக்கணித்ததால்தான் திமுகவுக்கு தோல்வி

## • இலங்கை பிரச்னையில் கபட நாடகம் ஆடும் அரசியல் தலைவர்கள்

## • ஜெ.-சசிகலா உறவு முறிவு பற்றி நேரம் வரும்போது தெரிவிப்பேன்

தெரியவில்லை. இது தேவையற்ற வரவேற்பு. அரசியலில் முதுபெரும் தலைவரும், தமிழ் தேசியம் பேசுகின்றவரும், 5 முறை முதல்வராகவும் இருந்த கருணாநிதி இவ்வாறு செய்தது ஏன் என்பதை அவர்தான் விளக்கவேண்டும்.

**கேள்வி: திமுகவினர் மீது நிலமோசடி வழக்கு பதிவு செய்வது பற்றி...?**

பதில்: இது அதிமுக அரசின் பழிவாங்கும் போக்குதான். நிலமோசடி வழக்கு பதிவு செய்யவேண்டும் என்றால் 1991லிருந்து நிலமோசடி செய்தவர்கள் யார், யார் என்பதை கண்டறிந்து வழக்குப்பதிவு செய்யலாம். அப்படி செய்தால் இதில் திமுக, அதிமுக என பலர் வருவார்கள்.

**கேள்வி: நெல்லை புதிய பஸ் நிலையத்திற்கு எம்ஜிஆர் பெயர் சூட்டப்பட்டது குறித்து...?**

பதில்: இது வரவேற்கத்தக்கது. எம்ஜிஆர் ஒரு நல்ல மனிதர். அனைவருக்கும் பிடித்தவர். அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும், சமுதாய மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைவர். இதில் அரசியலையும், சாதியையும் நுழைக்ககூடாது. தனிப்பட்ட முறையில் எம்ஜிஆர் எனக்கு நல்ல நண்பரும்கூட.

**கேள்வி: பரமக்குடி சம்பவத்திற்கு பிறகு நடந்த உள்ளாட்சித் தேர்தலில் அதிமுக பலமான வெற்றிபெற்றதே?**

பதில்: அது ஒரு கேலிக்கூத்து தேர்தல். உள்ளடி வேலைகள் நிறைய நடந்தன. உள்ளாட்சித் தேர்தலை வைத்து எதையும் கணித்துவிட முடியாது. வெற்றிபெற்றவர்கள் தோல்வி அடைந்ததாக அறிவிக்கப்பட்டார்கள். தோல்வி அடைந்தவர்கள் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டார்கள். வருகிற பாராளுமன்ற தேர்தலில் நிச்சயம் மாற்றங்கள் இருக்கும்.

**கேள்வி: சங்கரன்கோவில் இடைத்தேர்தலில் உங்கள் நிலை என்ன?**

பதில்: எங்கள் கட்சியின் செயற்குழு, பொதுக்குழு கூடி முடிவு எடுக்கும். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பின் நாங்கள் தனித்து போட்டியிடுவதா அல்லது கூட்டணியா? என்பதை அப்போது அறிவிப்போம். கூட்டணி தொடர்பாக அரசியல் தலைவர்கள் என்னை நாடினால் அந்த சமயத்தில் பார்த்துக்கொள்ளலாம்.

**கேள்வி: ஜெயலலிதா-சசிகலா உறவு முறிவுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

பதில்: இதுபற்றி இப்போதைக்கு கருத்து சொல்ல விரும்பவில்லை. அதற்கான நேரம், காலம் வரும்போது அதுபற்றி பேசுகிறேன்.

**கேள்வி: இலங்கை தமிழர் பிரச்னையில் சில அரசியல் தலைவர்கள் தொடர்ந்து குரல் கொடுப்பது ஏன்?**

பதில்: இதற்கு பதில் சொல்லவேண்டும் என்றால் கூலிக்கு மாரடிக்கிறார்கள் என்றுதான் சொல்லணும். இவர்களின் கபடநாடகம் என்றைக் காவது வெளிச்சத்திற்கு வரும். இவ்வாறு தனது ஒவ்வொரு பதிலையும் தனக்கே உரித்தான அதிரடியுடன் அவர் தெரிவித்தார். அப்போது மாநகர் மாவட்ட செயலாளர் கண்மணி மாவீரன் உடனிருந்தார்.

தமமுக தலைவர் ஜான் பாண்டியன் ஆக்ரோஷத்துடன் பேட்டியளித்த போது அவரது பல்வேறு முக தோற்றங்கள்...!

